தினமலர் - 06.11.2026

புதுச்சேரி அரசு

புதுச்சேரி மாசுக் கட்டுப்பாடு குழுமம்

3ஆம் தளம், PHB கட்டிடம், அண்ணா நகர், புதுச்சேரி-605 005
தொலைபேசி : (0413) -2201256 : தொலை நகல் : (0413) -2203494

பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்துவது தொடர்பான அறிவிப்பு

இந்திய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட கடலோர ஒழுங்குமுறை மண்டல (CRZ) அறிவிக்கை 2019-இன் படி, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் நான்கு பிராந்தியங்களுக்குமான திருத்தியமைக்கப்பட்ட வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தை (CZMP) புதுச்சேரி அரசு தயாரித்துள்ளது என்பது தொடர்புடைய அனைவருக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தின் (CRZ) கீழ் வகைப்படுத்தப்பட்ட பகுதிகள் வரையறுக்கப் பட்டுள்ளன. கடலோர ஒழுங்குமுறை மண்டல பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அனைத்து வளர்ச்சிப் பணிகளும் கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2019-இன் விதிமுறைகளுக்கு உட்பட்டு ஒழுங்குப்படுத்தப்படும்.

மேற்படி கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தை இறுதி செய்தற்கான நடைமுறையின் ஒரு பகுதியாக, உள்ளூர் மக்களின் கருத்துகள், ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளைப் பெறுவதற் காக, கீழ்கண்ட விவரங்களின்படி பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வ. எண்.	திட்டத்தின் விவரம்	பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தின் நாள் மற்றும் நேரம்	கூட்டம் நடைபெறும் இடம்
1.	புதுச்சேரி அரசால் தயாரிக் கப்பட்ட கடலோர ஒழுங்கு முறை மண்டல அறிவிக்கை 2019-இன்படி புதுச்சேரி பிராந்தியத்திற்கான திருத்தியமைக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மைத்திட்டம் (CZMP).	07.12.2026 காலை 10.00 மணி	கம்பன் கலையரங்கம் புஸ்சி வீதி (ஒதியன் சாலை), புதுச்சேரி - 605 001.

திருத்தியமைக்கப்பட்ட புதுச்சேரி பிராந்தியத்திற்கான கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தின் பிரதிகள் கீழ்கண்ட அலுவலகங் களில் அலுவலக வேலை நேரங்களில், வேலை நாட்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளன.

1. மாவட்ட ஆட்சியர் அலுவலகம், புதுச்சேரி.
2. இயக்குநர் அலுவலகம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, புதுச்சேரி.
3. ஆணையர் அலுவலகலம், புதுச்சேரி நகராட்சி, புதுச்சேரி.
4. ஆணையர் அலுவலகம், உழவர்கரை நகராட்சி, புதுச்சேரி.
5. ஆணையர் அலுவலகம், அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்து, புதுச்சேரி.
6. ஆணையர் அலுவலகம், பாகூர் கொம்யூன் பஞ்சாயத்து, புதுச்சேரி.
7. உறுப்பினர் செயலர் அலுவலகம், புதுச்சேரி நகர அமைப்பு குழுமம், புதுச்சேரி.
8. உறுப்பினர் செயலர் அலுவலகம், புதுச்சேரி கடற்கரை மேலாண்மை அதிகார அமைப்பு, புதுச்சேரி.

திருத்தியமைக்கப்பட்ட வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தின் (CZMP) வரைபடங்களின் பிரதிகளையும் புதுச்சேரி மாசுக் கட்டுப்பாடு குழுமத்தின் இணையதளமான https://dste.py.gov.in /ppcc/CZMP-pdy-2026.html என்ற முகவரியில் பார்வை யிடலாம். பொதுமக்கள் தங்களது கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் பதில்களை இவ்வறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்துப் பூர்வமாகப் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

டாக்டர்.N.ரமேஷ் உறுப்பினர் செயலர்
புதுச்சேரி மாசுக் கட்டுப்பாடு குழுமம்,